Koviloor Digital Library

5.30 பாண்டிச்சேரி, காரைக்கால்

5.30.1 ஆன்மீக நிறுவனங்கள் (11)

1. மு - அம்பலத்தாடுவார் சுவாமிகள் திருமடம், பாண்டிச்சேரி - **609634;**

2. உழவாரப்பணி சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை, கலைமகள் கம்ப்யூட்டர் ஆப்செட், **3** பழைய காய்கறி கடைவீதி, காரைக்கால்; த - G.R.S. இளங்கோவன்;

3. மு - ஓம் காரானந்தா ஆஸ்ரமம், **19** மாரி அம்மன் கோவில் தெரு, செல்லபெருமாள் பேட்டை, பாண்டிச்சேரி **605001;** தொ.பே. - **2250995;** து - மயிலாடுதுறை பரம்பிரம்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள்; த - தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா; செ - பிரம்மச்சாரி கோடீஸ்வரர்; ப - வெட்டவெளி தியானம், ஜெபம் வகுப்பு; வெ - **42** ஆன்மீக நூல்கள்;

4. சித்தாந்த சைவ திருத்தொண்டு மன்றம், **7/23**ம் குறுக்குத் தெரு, அவ்வை நகர், இலாலாப்பேட்டை, பாண்டிச்சேரி **605008;** செ - மாதவன்;

5. மு - சக்தி விநாயகர் வழிபாட்டுக்கழகம், பாண்டிச்சேரி **605001;** த - J. பாஸ்கரன்;

6. மு - சைவசித்தாந்த பெருமன்றம், **13** சிதம்பரனார் வீதி, செங்கேணியம்மன் நகர், உருளையன் பேட்டை, புதுச்சேரி **605005;** தொ.பே. - **0413 2250793, 2204944, 2278080;** கௌத - சு. திருநாவுக்கரசு; அ - ஆ. கந்தசாமி; த - கோ. ஆறுமுகம்; துத - கு. இராசசேகரன்; செ - ஒ. முனிசாமி; து.செ - தங்க இராச கோபால்; பொ - தங்க கிருட்டினராசு; ப - கூட்டு வழிபாடு சிவதல யாத்திரை, சமய சொற்பொழிவு, உழவாரப்பணி, சித்தாந்த வகுப்பு, நூல் வெளியீடு, இல்லந்தோறும் திருமுறை வேள்வி, திருக்கோயில் பெருவிழா, குடமுழுக்கு விழா, அன்னதானம், நடைப்பயணம், சமுகப்பணி; வெ - திருமுறை நாட்காட்டி, திருமுறை யமுது, நால்வர் போற்றிய நற்றமிழ், திருவெம்பாவை, வழிபாட்டுமாலை, நோய்க்கு ஏற்று பதிகம், விநாயகர் பாமாலை, ஆறெழுத்து உண்மை, திருவுலா திருப்பாமாலை, திருமுறைகருவூலம்;

Koviloor Digital Library

7. தருமபுர ஆதீனம், தருமபுரம் 609602; து - ஸ்ரீகுருஞான சம்பந்தர்; தோ - சுமார் கிபி 1560ல்; ஆமு - ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (26வது பட்டம்); ப - திருக்கோயில்கள் மடங்கள் என 27 நிறுவனங்கள் பராமரிப்பு, கிளை மடங்கள் நிர்வாகம், சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை, தம்பிரான்கள் - முனிவர்கள் - ஒதுவார் - அறிஞர் பலருக்கு ஆதரவு தந்து பாராட்டுவது, கல்வி நிறுவனங்கள், திருவாரூர் ஆலய திருப்பணி, சைவ சித்தாந்த ஆய்வு, கருத்தரங்கம்; வெ - ஞான சம்பந்தம் என்னும் திங்கழிதழ், நூல்கள் வெளியீடு; சி -- பதினெண் சைவ ஆதீனங்களுள் ஒன்று;

8. திலகவதியார் திருமுறை வழிபாட்டு மன்றம், திருவேட்டக்குடி 609409, காரைக்கால் வழி; த - சொக்கலிங்கம்;

9. பிரதோஷ வழிபாட்டுக் கழகம், பாண்டிச்சேரி 605001; த - சிவலோக நாதன் செட்டியார்;

10. மெய்கண்டார் சைவத்தொண்டு மன்றம், 32 வில்லியனூர் சாலை பவழக்காரன்சாவடி, பாண்டிச்சேரி 605001; த - நந்தகோபால்; செ - வே. சிவகுமார்;

11. ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமம், பாண்டிச்சேரி; ப - ஆன்மீகப்பணி, சமூகப்பணி, நூல்கள் வெளியிடுதல்; வெ - அரவிந்தர் நூல்கள் மற்றும் பல;

5.30.2 ஆலயங்கள்

i. பன்னிரு திருமுறை தலங்கள்;

1. திருவேட்டக்குடி 609610 - சாந்தநாயகி உடனுறை திருமேனி அழகர்;
2. திருத்தருமபுரம் 609602 - தேனமிர்தவல்லி உடனுறை தருமபுரீஸ்வரர்;
3. திருநள்ளாறு 609607 - பிராணாம்பிகை உடனுறை தர்ப்பாரண்யேஸ்வரர்;
4. திருவடுகூர் (ஆண்டார் கோயில்) 605012 - வடுவகிர்க் கண்ணியம்மை உடனுறை வடுகூர்நாதர்;

Koviloor Digital Library

6. ஆதார நூல்கள் சில

1. ஊரன் அடிகள் - சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் - சைவ ஆதீனங்கள்

2. B. லக்ஷ்மணன் - பழனியப்பா பிரதர்ஸ் - இந்திய தத்துவ ஞானம்

3. இ. எஸ்.டி. & கவிஞர் செ. ஞானன் மணிவாசகர் பதிப்பகம் - தத்துவ தரிசனங்கள்

4. த.சி. கந்தையா பிள்ளை-சந்தியா பதிப்பகம்-இந்து சமய வரலாறு

5. மு. வரதராசன்-சாகித்ய அக்காடமி-தமிழ் இலக்கிய வரலாறு

6. ஸ்ரீ அங்கிராஸ் - வெம்போலம் - மறையின் மறைபொருள்

7. மு. வரதராஜன் - தமிழ் இலக்கிய வரலாறு - சாகித்ய அகடமி

8. நஜன் - பிரதீபா பரசுரம் - ஹரிஹர அம்ஸ ஆசார்யர்கள்

9. சுகி.சிவம் - கற்பகம் - ஞானமலர்கள்

10. பெரியவர் இராமமூர்த்தி - கலைஞன் - மனிதனும் மண்ணும்

11. பெரியவர் இராமமூர்த்தி - கலைஞன் - அருமையானவர்களே

12. ஸ்வாமி - கலைஞன் - நீங்களும் யோகி ஆகலாம்

13. திருவரசு - திருவரசு - பிரார்த்தனை

14. கங்கா ராமமூர்த்தி - கங்கை - பக்தி பரவசக் கதைகள்

15. சுவாமி சிவானந்தா-தெய்வீக வாழ்க்கை சங்கம்-மரணத்துக்குப்பின் மனிதன் போவது எங்கே?

16. சுவாமி சிவானந்தா-தெய்வீக வாழ்க்கை சங்கம்-சிறுவர் சிறுமியர்க்கு தெய்வீக வாழ்க்கை

17. இரகுநாதன் - அநுராகம் - இந்துமதக் கேள்வி பதில்கள்

18. இரகுநாதன் - அநுராகம் - அர்த்தமுள்ள இந்துமதச் செய்திகள்

19. எ.வி.சுப்ரமணியன் - கலைஞன் - பிரம்ம ரகசியம்

20. ஸ்ரீS.V. ராதாகிருஷ்ணசாஸ்திரிகள் - ஸ்ரீசுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ் - தர்ம சாஸ்திரம்

21. ஜெயர்தன் - அநுராகம் - இந்துமத்தை புரிந்துகொள்ளுங்கள்

22. ஞானமூர்த்தி - அநுராகம் - பரமபாவன பக்திக் கதைகள்

Koviloor Digital Library

23. ஸ்வாமி - அநுராகம் - ஞானவசிட்ட கதைகள்
24. ஞானமூர்த்தி - அநுராகம் - பிரார்த்தனை தரும் வெற்றி
25. பழனி - அநுராகம் - சுவாமி சிவானந்தரின் அருள்மொழிகள்
26. புதுவை நித்திலன் - மதி - அர்த்தமுள்ள ஆன்மீகம்
27. ஆமரா - வானதி - இளைஞர்களுக்கு இந்துமதம்
28. ஆமரா - வானதி - புலப்படும் ஆன்மீகம்
29. தேவ்நாத் - நர்மதா - உலக முக்கிய மதங்களும் அவைகள் சொல்லும் உண்மைகளும்
30. ப்ரியா ராமசாமி - கலைஞன் - அறிவோம் ஆன்மீகம்
31. ஆச்சார்யா - நர்மதா - மன அமைதிக்கு வழிகாட்டும் பக்திமார்க்கம்
32. கங்கா ராமமூர்த்தி - கங்கை - பக்தி பரவசக் கதைகள்
33. கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - போகம் ரோகம் யோகம்
34. கண்ணதாசன் - வானதி - அர்த்தமுள்ள இந்துமதம்
35. கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - ஞானத்தை தேடி
36. லட்சுமி சுப்ரமணியம் - வானதி - அமைதீயான வாழ்க்கைக்கு ஆன்மீக வழிகாட்டி
37. ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி - வானதி - தர்மத்தின் மதிப்புதான் என்ன?
38. ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி - வானதி - ஸாதனமும் ஸாத்யமும்
39. சுவாமி சிவானந்தா - தெய்வீக வாழ்க்கை சங்கம் - மறைகுலைப்பாடும் தியானமும்
40. சாந்தானந்த ஸ்வாமிகள் - கங்கா காவேரி - இதய போதனை
41. சாந்தானந்த ஸ்வாமிகள் - புவனேஸ்வரி சாரிடீஸ் - ஆத்ம சோதனை
42. சௌரி - அநுபோகம் - இந்து மதம் பண்பாட்டு கதைகள்
43. லட்சுமி சுப்ரமணியம் - நர்மதா - வாழ்வில் வெற்றிபெற பதில்கள்
44. லட்சுமி சுப்ரமணியம் - இந்திரா - சின்மயானந்தரின் சிறுகதைகள்
45. யோகி சுத்தானந்த பாரதியார் - தனலெட்சுமி - ஏழைபடும் பாடு
46. ஸ்வாமி - அநுராகம் - வேதார்ந்த ஸங்க்ரஹம்
47. ஆச்சார்யா - நர்மதா மன அமைதிக்கு - வழிகாட்டும் பக்திமார்க்கம்

Koviloor Digital Library

48. சுத்தானந்த பாரதியின் - சங்கர் - சமயோகப் பயிற்சி

49. லட்சுமி சுப்ரமணியம் - வானதி - இந்துமதம் பதிலளிக்கிறது

50. வால்மீகி - அநுராகம் - இந்து மதக் கதைகள் (4 பாகங்கள்)

51. மகாகவி சுப்ரமணிய பாரதியார் - அநுராகம் - பதஞ்சலி யோக சூத்திரங்கள்

52. சௌரி - அநுராகம் - இந்து மதப் பண்பாட்டுக் கதைகள்

53. ஞானமூர்த்தி - அநுராகம் - இந்து மதம் காட்டும் அமைதியும் ஆனந்தமும்

54. ஸ்வாமி - கலைஞன் - பஞ்சதசீ

55. சுப்ரமணியன் - கலைஞன் - அன்புமிகுந்த இந்து மதம்

56. கணபதி - கலைஞன் - ஆத்ம தாரகை

57. சுவாமி சச்சிதானந்தா - வானதி - இந்து தர்ம வாழ்க்கையும் தத்துவங்களும்

58. கண்ணதாசன் - வானதி - பகவத்கீதை

59. கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - உன்னையே நீ அறிவாய்

60. கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - சுகமான சிந்தனைகள்

61. சித்ரா திருமாவளவன் - கண்ணதாசன் பதிப்பகம் - இறையுணர்வு

62. அண்ணாத்துரை - கண்ணதாசன் பதிப்பகம் - அர்த்தமுள்ள இந்துமதம்

63. அண்ணா - ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் - உபநிஷத்ஸாரம்

64. சுவாமி சிதானந்தா - தெய்வீக வாழ்க்கை சங்கம் - இந்த உண்மையை சிந்தியுங்கள்

65. ப்ரியா ராமசாமி - கலைஞன் - அறிவோம் ஆன்மீகம்

66. அண்ணா - ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் - பூஜா விதானம்

67. ஸ்வாமி - அநுராகம் - அதர்வண வேத உபநிடதம்

68. ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகள் - கங்கை - அறிய வேண்டிய அறநெறிகள்

69. ஸ்வாமி - அநுராகம் - காயத்ரீ மந்திரம்

70. ஞானமூர்த்தி - அநுராகம் - இந்து மதம் நோக்கிய இறைதத்துவம்

இன்னும் பல

Koviloor Digital Library

7. ஆன்மீக அகராதி

அத்வைதம் : ஆதிசங்கரர் எட்டாம் நூற்றாண்டில் அளித்த வேதாந்த விளக்கம்; பூரணமான பிரமம் அழியாத சத்துப்பொருள். அது அறிவு மயமானது. ஆனந்தமயமானது. எங்கும் நீக்கமற நிறைந்தது. இந்த உலகம் பொய்யானது.

அகச்சந்தானகுரவர் : திருநந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிகள் ஆகிய நால்வரும் ஆவர். இவர்கள் தேவபரம்பரை. கயிலாயசுவாமிகள்.

அறம் : அறம்செய விரும்பு என்பது ஔவை. அறத்தால் வருவது இன்பம் என்றார் திருவள்ளுவர். பிரதிபலன் எதிர்பாராமல் பிறருக்கு உதவும் பெரும்பணியே அறமாகும். நமது புராதன நூல்களில் கீழ்க்கண்ட 32 வகையான அறங்கள் சொல்லப்பட்டுள்ளன. அறவைச் சோறு, அறவைத் தூரியம், அறவைப் பிணஞ்சூடுதல், அறுசமயத்தார்க்கு உண்டி, ஆதுலர்க்குச் சாலை, ஆவுரிஞ்சுதறி, ஏறுவிடுதல், ஐயம், ஒவார்க் குணவு, கண்ணாடி, கண்மருந்து, கன்னிகாதானம், காதோலை, சிறைசோறு, சுண்ணம், சோலை, தண்ணீர்பந்தல், தலைக் கெண்ணெய், தடம், திண்பண்டம் நல்கல், நாவிதர், நோய்க்கு மருந்து, பசுவுக்கு வாயுறை, பெண்போகம், பிறர்துயர் காத்தல், மடம், மகப்பேறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், வண்ணார், விலங்கிற்குணவு, விலைகொடுத்து உயிர்காத்தல்;

அட்டமகாசித்திகள் : அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், வசித்துவம், ஈசத்துவம் ஆகிய எட்டும் அட்டமகா சித்திகள். இவற்றை பெற்றவர் சித்தர் ஆவார்.

ஆன்மீகம் : மனிதப்பிறவி-பரம்பொருள், மனிதப்பிறவி - ஜடப்பொருள், மனிதப்பிறவி - இதர உயிரினங்கள் ஆகிய முப்பொருளையும் ஆய்ந்தறிவது ஆன்மீகம்.

ஆத்மவிசாரம் : கி.பி. 19ம் நூற்றாண்டில் ரமணர் நிறுவினார். அத்வைத கோட்பாட்டில் பற்று கொண்டது. நான் யார் என்று நமக்குள் விசாரித்து அறிதல் வேண்டும். பரம்பொருள் அல்லது பிரம்மம் மட்டுமே உண்மை. எண்ணங்களிலிருந்து விடுபடுவதே முக்தி. மகிழ்ச்சி என்பது உள்ளே இருப்பது. பொருள்களின் உறவால் அல்ல.

Koviloor Digital Library

ஆரணியகங்கள் : பிரமாணங்களுக்குப்பின் ஆரணியகங்கள் தோன்றின; காட்டில் தவம் செய்யும் போது படிக்கவேண்டியவை ஆரணியகங்கள் ஆயின. முதுமையில் குடும்ப பாரத்தை புதல்வர்களிடம் கொடுத்துவிட்டு தனிமையில் தவஞ்செய்வது வழக்கம். அப்போது ஆரணியகங்கள் பயன்பட்டன.

ஆரிய சமாஜம் : கி.பி. 19ம் நூற்றாண்டில் சுவாமி தயானந்த சரஸ்வதி உருவாக்கியது. சமூக சீர்திருத்த அமைப்பு. இறைவனே அனைத்திற்கும் ஆதாரமான இணையற்ற மூலப்பொருள். வேதங்கள் அறிவு நூல்கள். அவற்றை கற்பது, கேட்பது தலையாய கடமை. பொய்யை புறக்கணித்து உண்மையை என்றும் ஏற்கவேண்டும். அறத்திற்கு இசைந்த செயலே அவசியம். அன்பு, அறிவு, சமுதாய நலன் பேணவேண்டும்.

ஆகமங்கள் : கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவை தந்திரம் மகா மந்திரம், சம்ஹிதை, சிவஞானம் என்றெல்லாம் கூறப்படுகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். நான்கு பாதங்களையும் விவரிப்பவை. 28 சிவ ஆகமங்கள் உள. அவையாவன : காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், குக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்வாசம், சுபாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம், புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், ஸர்வோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்;

இதிகாசங்கள் : இராமாயணமும் மகாபாரதமும் இதிகாசங்கள் ஆகும். பெண்ணாசையின் தீங்கை இராமாயணமும் மண்ணாசையின் தீங்கை மகாபாரதமும் விளக்குகின்றன. திருமாலின் பத்து அவதாரங்களில் இராமாவதாரம் இராமாயணத்திலும், கிருஷ்ணாவதாரம் மகாபாரதத்திலும் சித்தரிக்கப்படுகின்றன. இராமனை ஒரு நல்லவனாகவும், கிருஷ்ணனை ஒரு வல்லவனாகவும் காட்டுகின்றனர். பல நீதிகளை எடுத்துச் சொல்வன இதிகாசங்கள்.

உலகாயதம் : பஞ்சபூதங்களால் இந்த உலகும், உடலும் உண்டாகி வந்துள்ளன. பூவுலக வாழ்வு மட்டுமே உண்மையானது. சந்ததி தோற்றுவித்தல் அவசியம். மேலுலகம் செல்வது மீண்டும் பிறப்பது இல்லை. நல்லவை செய்தல் வேண்டும், அல்லவை செய்தல் கூடாது. நல்லவை நலம் தரும், தீயவை தீமை தரும். கண்டு அளந்து அறிவதேவுண்மையான அறிவு, காதால் கேட்பது ஐயத்திற்குரியது. புகழ் நிற்க வாழ்வதே நாடப்படுவது. சுபாவ வாதமும், நியதிவாதமும் விளக்கமுறைகளாக ஏற்றுக்கொள்ளலாம்.

Koviloor Digital Library

உத்தரமீமாம்சை : கி.மு 2ம் நூற்றாண்டில் வாதராயணர் துவக்கியது; வேதாந்த சூத்திரமே உத்தர மீமாம்சை ஆகும்; வேதாந்த சூத்திரங்களுக்கு சங்கரர் அத்வைதக் கொள்கையாகவும், மத்வர் த்வைதக் கொள்கையாகவும், ராமானுஜர் விசிஷ்டாத்வைதக் கொள்கையாகவும், ஸ்ரீகண்ட சிவாச் சாரியார் சிவபரமாகவும் பொருள் கண்டுள்ளனர்; உபநிடதக் கருத்துக்களை விளக்குவது. தியானம் வலியுறுத்தப்படுகின்றது.

உபநிடதங்கள் : அருகில் இருந்து கேட்கப்படுவது (குரு மாணாக்கர் முறையில் உபதேசிப்பது). உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருளை ஆய்வது. ஓங்காரத்தை உச்சரிக்க வலியுறுத்துவது. ஆசிரியர்கள் எவரென அறியமுடியாது. யாகங்கள் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. பௌத்த மதத்திற்கு முந்தியவை. எண்ணிக்கை 108 என்பது வழக்கு.

உபபுராணங்கள் : இதிகாசங்களுக்குப்பின் தோன்றின. செவி வழியாக வந்த பழங்கதைகள் திரட்டப்பட்டு உபபுராணங்கள் ஆயின. சனற்குமார, நரசிம்ம, ஸ்கந்த, சிவதர்ம, துர்வாச, மார்க்கண்டேய. கபில, வாமன, உசான, பிரமாண்ட, வருண, காளிகா, மகேசுவர, சாம்ப, சௌர, பரசுராம, மாரீச, பார்க்கவ என்ற பதினெட்டு உப புராணங்கள் வளர்ந்தன.

ஐம்பெரும் வேள்வி : இறைவழிபாடு (தேவயக்ஞும்), பாராயணம் (ரிஷியக்ஞும்) பெற்றோருக்கு பணிவிடை (பிதிர்யக்ஓம்), மக்களுக்கு தொண்டு (நரயக்ஞும்) பிற உயிர்களிடம் அன்பு (பூதயக்ஞும்) என ஐவகை நற்செயல்களை ஐம்பெரும் வேள்வி என்பர்.

காணாபத்யம் : கணபதியை முதற் கடவுளாக வழிபடுவது. ஆதிசங்கரர் வகுத்தது. ஔவையார், காசிப முனிவர், நக்கீரர், அருணகிரிநாதர், பாரதியார் மற்றும் பலரால் பாடப் பெற்றவர் கணபதி. விக்னம் தீர்ப்பவர் என துதிக்கப்படுபவர்.

குர்ரான் : கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் முகம்மது நபி உருவாக்கிய இஸ்லாமியருக்கு பிரதான நூல். தொழுகை, மனித நேயம் - இரண்டும் வலியுறுத்தப் படுகின்றது.

கௌமாரம் : முருகனை முதற் கடவுளாக வழிபடுவது. ஆதிசங்கரர் வகுத்தது, அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், கிருபானந்தவாரியார் போன்ற மகான்கள் போற்றி வளர்த்தது.

Koviloor Digital Library

சன்மார்க்கம் : கி.பி. 19ம் நூற்றாண்டில் திரு அருட்பிரகாச வள்ளலார் தோற்றுவித்தது; அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்று முழங்கிய வள்ளலார் சோதியை இறைவனாகக் கண்டவர். மனிதநேயமே சிறந்தது என்று கருதியவர். அன்னதானமே பிரதானமானது என்று வலியுறுத்தியவர்.

சமணம் : கி.பி. நூற்றாண்டில் மஹாவீரர் அருளியது. ஆருகதம், ஜைனம், அவைதிகமதம், என்றெல்லாம் அழைக்கப்படும். வேத நெறியை ஏற்காதது. அருகனை வழிபடுபவர்கள். உலகத்திற்கு காரணமாக கடவுள் இல்லை என்பது இவர்கள் கோட்பாடு.

சமயம் : அரிசி, பருப்பு, காய்கறி போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு சுவையான, சத்துள்ள, ஜீரனிக்கத்தக்க பலவகை நல்லுணவுகளை தயாரிப்பது சமையல். அதுபோன்று பரம்பொருள், ஜடப்பொருள், உயிரினங்கள் இவற்றைக் கொண்டு இறைவன் அளித்த 96 ஆதாரங்களை (தத்துவங்கள்) பயன்படுத்தி 16 பேறுகளைப் பெற நன்னெறிகளை ஆக்கித்தருவது சமயம். 96 ஆதாரங்களாவன; பூதங்கள் 5 (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்), கர்மேந்திரியம் 5 (வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தயம்) கர்மேந்திரிய விஷயங்கள் (வசனம், கமனம், தானம், விசர்ச்சம், ஆனந்தம்), ஞானேந்திரியங்கள்5 (துவக்கு, சட்க, சரோத்திரம், ஜிஹ்வை, ஆக்கிராணம்), தன்மாத்திரைகள் 5 (சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்), அந்தகரணங்கள்5 (மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம்), நாடிகள் 10 (இடை, பிங்கலை, கழு, கண்டம், அட்சி, காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கிலி, குரு), வாயுக்கள் 5 (பிராணன், அபானன், விபானன், உதானன், சமானன்), உயவாயுக்கள் 5 (நாகன், கூர்மன், க்ருகரன், தேவதந்தன், தனஞ்செயன்), ஆச்ரயங்கள்5 (அமராச்ரயம், விபஜனாச்ரயம், ஜலாச்ரயம், மலாச்ரயம், சுக்லாச்ரயம்), கோசங்கள் 5 (அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம்) ஆதாரங்கள் 6 (மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞேயம்), தோஷங்கள் 3 (வாதம், பித்தம், சிலேத்துமம்), ஈசனாத்ரவியங்கள் 3 (தாரேசன, புத்திரேசன, வித்தேசன்), குணங்கள் 3 (சாத்வீகம், ராஜஸம், தாமஸம்) துர்குணங்கள் 14 (இராக, துவேச, காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்ய, டம்ய, தர்ப, ஈர்சை, அசுயை, அகங்கார, மமகார), வகை ர 2 (நல்வினை, தீவினை), அவஸ்தைகள் 5 (சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) ஆகும். பதினாறு பேறுகள் ஆவன; கல்வி, ஆயுள், நட்பு, வளமை, இளமை, உடல்நலம், சலியாதமனம், அன்பகலா மனைவி, தவறாத சந்தானம், தாளாத கீர்த்தி, வாக்குவன்மை, கொடை, தொலையாதநிதி, நேர்மை, துன்பமில்லாத வாழ்வு, இறையருள் ஆகும்.

சமயக்குரவர் : சைவம் தழைக்க அரிய பணி ஆற்றிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்) சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய

Koviloor Digital Library

நால்வரும் சமயக்குரவர் என்று போற்றப்பட்டு சிவாலயங்களில் என்றும் நிலைத்த புகழுடன் அருள்புரிகின்றனர். நால்வர் எனப்படுவர்.

சந்தானகுரவர் : மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் சந்தான குரவர் ஆவர். இவர்கள் திருக்கயிலையில் நந்தி பெருமானிடம் உபதேசம் பெற்ற சனற்குமார முனிவர் வழிவந்தவர்கள். இவ்வழியினர் தற்போது குருமகா சந்நிதானங்களாக ஆதினங்களை அருள்பாலித்து வருகின்றனர். குரு பரம்பரையாகும்.

சாக்தம் : சக்தியை முழு முதலாக வழிபடுவது; சக்தியை கலைமகள், மலைமகள், திருமகள் என்றும் முப் பெருந்தேவியராகக் கொண்டு போற்றுவது. ஆதிசங்கரர், அபிராமி பட்டர் போன்ற மகான்கள் சக்தி வழிபாட்டில் பெருமை பெற்றவர்.

சாங்கியம் : கபிலமுனிவர் நிறுவியது; கபில சூத்திரம், சாங்கிய பிரவசன சூத்திரம், சாங்கிய காரிகை, சாங்கிய தத்துவ கௌமுதி, சாங்கிய சாரம்; ஷட்தரிசனங்களில் (சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை) ஒன்று; வேதங்களை ஏற்கிறது; இதற்கு ஆதாரநூல் ஈஸ்வர கிருஷ்ணரின் சாங்கிய காரிகை;

சித்தர் தத்துவம் : யோக நிலையில் ஈடுபட்டு ஞானமுற்று தம் உளத்தில் இறைவனைக் கண்டவர் சித்தர். அவர்கள் கூறிய அகவழிபாடே சித்தர் தத்துவம் ஆகும். ஒன்றே பாரம்பொருள்; சாதிப் பிரிவினை சடங்குகள், புறவழிபாடு, மத பேதங்கள் கூடாது; புலால் உண்ணல் தவறு; அழுக்கு என்பது உடலால் அல்ல, உள்ளத்தில் அழுக்கு தவிர்க்க வேண்டும்; மறுபிறப்பு இல்லை; உடம்மை பேண வேண்டும்; இன்றேல் உயிர் தங்காது;

சீக்கியம் : கி.பி. 16ம் நூற்றாண்டில் குருநானக் நிறுவியது. மூல நூல் குருகிரந்தம். வழிபாட்டு தலங்கள் குருத்வாரா எனப்படும். உருவ வழிபாடு இல்லை. குருகிரந்தம் என்னும் நூலே வாழும் குருவாகும். சனாதன இந்து மதத்திற்கு மாறானது. உண்மையே உயர்ந்தது, உண்மை நடத்தை அதனினும் உயர்ந்தது என்பதே கோட்பாடு.

சைவ சித்தாந்தம் : சுத்தாத் வைதம் என்று கூறுவர். சிவனை முழுமுதல் கடவுளாகக் கொள்வது; மெய்கண்டார்; உமாபதி சிவாச்சாரியார், அருள்நந்தி சிவனார், திருவதிகை மனவாசகம் கடந்தார், திருமூலர், ஆகம ஆசிரியர்கள் வகுத்து வளர்த்தது சைவ சித்தாந்தம்;

Koviloor Digital Library

சைவசித்தாந்த சாத்திரங்கள் : சைவ சித்தாந்தத்தை விளக்குவன கீழ்க்கண்ட 14 சாத்திரங்கள் :

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யகடந்த தேவநாயனார்
2. திருக்களிற்றுப் பாடியார்- திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்
3. சிவஞானபோதம் - மெய்கண்டார்
4. சிவஞான சித்தியார் } அருள்நந்தி சிவனார்
5. இருபா இருபது }
6. உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசகம் கடந்தார்
7. சிவப்பிரகாசம் } உமாபதிசிவம் (சித்தாந்த அட்டகம்)
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றி பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

சௌரம் : சூரியனை முழுமுதல் கடவுளாகக் கொண்டு நவக்கிரகங்களை வழிபடுவது. சிவாலயங்களில் நவகிரகங்கள் முக்கிய இடம் பெறும். மனிதனுக்கு நன்மை தீமைகளுக்கு ஏற்ப தீர்ப்பு தருபவை நவகிரங்கள்.

த்வைதம் : மத்வாச்சாரியார் அளித்தது. ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்று கூறுவது. ராமர், கிருஷ்ணர், லட்சுமி நரசிம்ஹர், வெங்கடாசலபதி ஆகிய தெய்வங்களை வழிபடுவது; இவ்வழியில் ஸ்ரீ ராகவேந்திரர் பிரசித்தமானவர்.

த்வைத அத்வைதம் : நிம்பர்க்கர் உருவாக்கியது; கிருஷ்ணனும் ராதையும் வணங்குதற்குரிய தெய்வங்கள்; பாகவதமே முதல் வேதம்; உயிரும் உலகும் வேறானவை; நூல்கள் - பிரம்ம சூத்ர உரை, வேதாந்தபாரிஜாத சௌரப்பவுரை;

Koviloor Digital Library

தரும சாஸ்திரங்கள் : யாக்ஞ வல்கியர், உசனர், ஆங்கிரசர், யபர், ஆவஸ்தம்பர், சம்வர்த்தர், கார்த்தியாயனர், பிரகஸ்பதி, பராசரர், வியாசர், சங்கர், விகிதர், தக்கர், கௌதமர், சதாதபர், வசிட்டர், மனு, நாரதர் ஆகிய பதினெண்மரும் எழுதிய நீதி நூல்கள் தர்ம சாஸ்திரங்கள் எனப்படும்.

திருஅருட்பா : சன்மார்க்க நெறி கண்ட அருட்பிரகாச வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகள் தந்த அரிய நூலாகும். அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை என்று பறை சாற்றிய வள்ளலார் இறைவனை சோதியாகவும் மனிதனை கருணையாலும் நேசித்தவர்.

பரமாத்துவிதம் : தோற்றம் - கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வீரமா நகரில் தத்துவராயர் துவங்கியது; நூல் - பிரம்மகீதை; இதற்கு அத்வைத சைவம் என்றும் பெயர் ; உலகாயதம், சித்தாந்த சைவம், வைணவம், சங்கர மதம் ஆகியவற்றை மறுப்பது;

பஞ்சாசாரம் : சிவநெறியில் நிற்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய ஐவகை ஒழுக்கங்கள்; அவையாவன, இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருதியாசாரம், கணாசாரம்.

பன்னிரு திருமுறைகள் : சிவவழிபாட்டில் தமிழ் வேதமாக திகழ்கின்றன. பன்னிரு திருமுறைகள். அவையாவன 1,2,3 தேவாரம் - திருஞானசம்பந்தர்; 4,5,6, தேவாரம் - திருநாவுக்கரசர்; 7 தேவாரம் - சுந்தரமூர்த்தி நாயனார்; 8 திருவாசகம், திருக்கோவையார் - மாணிக்கவாசகர்; 9 திருவிசைப்பா - திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி, காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதனார், புருஷோத்தம நம்பி & திருப்பல்லாண்டு - சேதிராசர்; 10. திருமந்திரம் - திருமூலர்; 11 திருமுகப்பாசுரம் முதல் திரு ஏகாதச மாலை முதல் நாற்பது நூல்கள் - திரு ஆலவாய் உடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரண தேவர், இளம் பெரும் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பி ஆண்டார் நம்பி;

பகவத்கீதை : மஹாபாரதத்தில் நீதி, பக்தி இவற்றை வழங்கும் மூன்று பகுதிகள் முக்கியமானவை. 1. ஸநத் ஸுஜாதீயம் 2. பகவத்கீதை, 3. விஷ்ணு சகஸ்ரநாமம். பகவத்கீதையாவது தேர்த்தட்டில் அர்ச்சுனனுக்கு கண்ணன் திருவாய் மலர்ந்தருளிய நடுநாயகமான நீதி ரத்னம். பகவத்கீதைக்கு 300 க்கு மேற்பட்ட மொழிகளில் விளக்கங்கள் உள்ளன. அரியானா மாநிலத்தில் உள்ள குருக்ஷேத்திரத்தில் கீதையில் மூலமும், மொழிப்பெயர்ப்புகளும், விளக்கங்களும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பஞ்சாட்சரம் : ந,ம,சி,வா,ய என்னும் ஐந்தெழுத்து பஞ்சாட்சரம் எனப்படும். சி-சிவம், ஆகாரம்-அருள், யகாரம்-ஆன்மா, நகரம்-திருநாதம், மகாரம்-மலம்.

பிரம்மசூத்திரம் : பாதநாயனர் என்பவர் உபநிடதக் கருத்துக்களை எல்லாம் ஆய்ந்து திரட்டி நூற்பா வழியில் ஒழுங்குபடுத்தி இயற்றியதே பிரம்மசூத்திரம். இதற்கு வேதாந்த சூத்திரம், சாரீரிக மீமாம்சை என வேறு பெயர்களும் உண்டு. இந்த பிரம்மசூத்திரத்திற்கு ஆதிசங்கரர் எழுதி உரை அத்வைதம் எனவும், இராமானுஜர் எழுதியது விசிஷ்டாத்வைதம் எனவும், மத்வர் எழுதியது த்வைதம் எனவும், ஸ்ரீகண்டர் எழுதியது சிவாத்துவைதம் எனவும் ஆயின;

பிரம்மசமாஜம் : கி.பி. 19ம் நூற்றாண்டில் ராஜாராம் மோகன் ராய் நிறுவியது. ஒன்றே கடவுள், விக்கிரக ஆராதனை தவறு என்பதே கொள்கை. சாதி வேறுபாடு, பெண்களுக்கு கொடுமை போன்ற சமூக அநீதிகளை களைய வேண்டும்.

பிரம்மாணங்கள் : வேதங்களில் மந்திரம் பிரமாணம் என இருபகுதிகள்; வேதங்களில் உள்ள பாடல்களே மந்திரங்கள்; கிரியை முறைகளை விளக்க எழுதப்பட்ட வசனங்களே பிரமாணங்கள்; ஒவ்வொரு வேதத்திற்கு தனித்தனி பிரமாணம் தோன்றியது; இருக்கு வேதத்திற்கு ஐதரேயம், கௌசீதகி - யஜுர் வேதத்திற்கு சதபதப்ரமாணம் - சாம வேதத்திற்கு சைமினியம் தாண்டிய மகா பிரமாணம் - அதர்வண வேதத்திற்கு கோபாத பிரமணம் என்பன; பிரமாணங்கள் பயின்றவர் பிராம்மணர்.

புராணங்கள் : வியாசர் எழுதியவை, பிரம்மா, விஷ்ணு,சிவன் ஆகிய மூவரையும் கடவுள்களாகக் கொண்டு எழுதப்பட்டவை; விஷ்ணுவுக்காக பாகவதம், நாரதீயம், கருடம், பதுமம், வராகம், விஷ்ணு என்ற ஆறும் - சிவனுக்காக சிவ, இலிங்க, ஸ்கந்த, அக்னி, மச்ச, கூர்ம என்ற ஆறும் - பிரம்மாவுக்காக பிரம்ம, பிரம்மாண்ட, வைவர்த்த, மார்க்கண்டேய, வாமன, பாவிச்யா என்ற ஆறும் - ஆக பதினெண் புராணங்கள் தோன்றின.

பூர்வமீமாம்சை : சைமினி முனிவர் துவங்கியது; கோட்பாடுகள் - உலகம் என்றும் நிலைபெற்றது. அழியும் என்பது பொய்; வினைக்கு தக்க பயன்கள் வரும்; பரமாத்மா என்று ஒன்றும் இல்லை; சரயமுனிவர், பிரபாகரன், பட்டாச்சாரியன் ஆகியோர் வளர்த்தனர்.

பௌத்தம் : கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கபிலவஸ்துவில் பிறந்த புத்தர் தோற்றுவித்த மதம்; நூல்கள் - லலித விஸ்தாரம், புத்தசரிதம், சௌத்தர நந்தம்; கோட்பாடு - இறைவன் இல்லை; பிரத்யட்சம் (காட்சி), அனுமானம்

Koviloor Digital Library

(கருதல்) ஆகிய அளவைகளை ஏற்கும்; காரண காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது; வேதம் ஏற்கப்படாது; ஆன்மா, மறுபிறவு, படைப்பு இவை பற்றி சிந்திப்பது தேவையற்ற ஆய்வு; ஆசையைக் குறைக்க அமைதி பெருகும்; இவ்வுலக வாழ்வை நேசித்து துன்பத்திலிருந்து விடுபட்டு அனைவரும் நலமுடன் இனிதாக அற உணர்வோடு வாழவேண்டும்; கி.பி. 10ம் நூற்றாண்டில் முகமதிய, வைதீக, சைவ, வைணவ மதங்களால் நலிவுற்றது;

பைபிள் : இயேசு கிறிஸ்து உருவாக்கிய கிறித்துவ மதத்தினருக்கு வேதம்; அன்பே கடவுள்; மக்களை அன்போடு நேசி; மற்றவர் குற்றங்களை என்றும் மன்னித்து ஈகையை வளர்த்து மனித நேயத்துடன் வாழவேண்டும் என்பதை வலியுறுத்துவது.

மும்மலம் : ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மூன்று மலங்கள்.

முப்பொருள் : பதி(இறைவன்), பசு(உயிர்), பாசம்(தளை), ஆகிய மூன்று பொருள். முப்பொருள் பற்றி முழுமையாக விளக்கிய முதல் நூல் சிவஞானபோதம்.

முக்தித்தலங்கள் : திருவாரூரில் பிறக்க முக்தி, சிதம்பரம் தரிசிக்க முக்தி, திருவண்ணாமலை நினைக்க முக்தி, காசியில் இறக்க முக்தி.

முழுநீறு : சுந்தரர் பாடிய திருத்தொண்டர்த் தொகையில் முழுநீறு பூசியவர் போற்றுதற்குரிய சிவனடியாருள் ஒருவர் என்று குறிப்பிடுகிறார். உடலில் 16 இடங்களில் திருநீறு அணிபவர் முழுநீறு பூசியவர் ஆவார்.

மூவர் : தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியவர் மூவர் ஆகும்.

முக்கியாத்வைதம் : வாமதேவர் அருளிய தத்துவம்;

நால்வகை நெறி : சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு ஒழுக்க நெறிகளும் தவமாகும். சரியை என்பது திருக்கோயிலுக்கு செய்யும் புறத்தொண்டு (தாசமார்க்கம்); கிரியை என்பது இறைவன் திருமேனியை எழுந்தருளச் செய்து வழிபடுதல் (சத்புத்ர மார்க்கம்); யோகம் என்பது இறைவனை அகத்திலே எழச்செய்வது (சகமார்க்கம்); ஞானம் என்பது இறைவனே குருவடிவாகி உணர்த்துவது (சன்மார்க்கம்)

நாலாயிர பிரபந்தம் : அருந்தமிழால் நற்சுவைகளை ஆய்ந்துரைத்த பன்னிரு ஆழ்வார்களில் (பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்,

Koviloor Digital Library

திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், குலசேகர ஆழவார், பெரியாழ்வார், தொண்டரடி பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள், மதுரகவி ஆழ்வார்) இனிய பாசுரங்களே நாலாயிர திவ்ய பிரபந்தமாகும். ஸ்ரீமந் நாராயணனின் வைபவங்களை விவரிக்கும் நூல். பிரபந்தங்களை பக்தியோடு பாராயணம் செய்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நலம்பெறுவர் என்பது சான்றோர் கருத்து. தென்கலை வைணவர்கள் இதை திராவிட வேதம் என்பர். தொகுத்து வழங்கியவர் ஸ்ரீமந் நாதமுனிகள். ஆச்சாரியார் சிலரின் பாராட்டுப் பாடல்களும் (தனியன்கள்) இணைக்கப்பட்டுள்ளன.

நியாயம் : கி.மு. 3ஆம் நூற்றாண்டில் அட்சபாதர் (கௌதமர்) துவக்கியது; நூல் - நியாய சூத்ரம்; கோட்பாடுகள் - சடப்பொருட்கள் அணுவால் ஆகியது, அணுக்கள் சேர்ந்து பிரபஞ்சம் உண்டானது. ஆன்மா பலதிறப்பட்டது, சடத்துடன் இணையும்போது உணர்வுகள் பெறுகின்றது; நியாயம் என்ற சொல் 'வழிகாட்டுவது' என்ற பொருளில் வருவது; உண்மையை எப்படி அறிவது என்பதே குறிக்கோள் ஆகும்;

வழிபாடு : நெல் கிடைக்க உழவன் வயலில் படுவது பாடு (உழைப்பு). நல்வழி கிடைக்க இறைவனிடம் மன்றாடிப் பாடுபடுவது வழிபாடு.

வீரசைவம் : கி.பி. 12ம் நூற்றாண்டில் பசவண்ணர் உருவாக்கியது; கோட்பாடுகள் - இலிங்கமும் குருவும் வழிபாடு செய்யப்படும்; இலிங்கம் பிறந்தது முதல் இறக்கும்வரை உடலோடு இருக்கும்; ஐவகை ஒழுக்கம் (பஞ்சாசார்யம்), எண்வகை காப்பு (அஷ்டாவரணம்), அறுவகை நிலை (சடுத்தலம்) கடைபிடித்தல் அவசியம்; ஐவகை ஒழுக்கமாவது - இலிங்க ஒழுக்கம், தன்னிலை ஒழுக்கம், சிவ ஒழுக்கம், பணிவொழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம்; எண்வகைக் காப்பாவது - குரு, இலிங்கம், சங்கமம், திருவடி துலக்கல், திருவமுது, திருநீறு, உருத்திராக்கம், மந்திரம்; அறுவகை நிலையாவது - பக்தித்தலம், மகேசுவாரத்தலம், பிரசாதித்தலம், பிராணலிங்கத்தலம், சரணத்தலம், ஐக்கியத்தலம். நூல் - பிரபுலிங்கலீலை (சிவப்பிரகாச சுவாமிகள்); வரலாறு - துறைமங்கலம் சிவப்பிரகாசர், சிதம்பர சுவாமிகள், குமாரதேவர், சாந்தலிங்க அடிகள் வீரசைவம் காத்தனர்; பொம்மபுரம் மடம், திருக்கோயிலூர் ஞானியார் மடம் இவ்வழி நடப்பன;

விசிஷ்டாத்வைதம் : இராமானுஜர் அளித்தது. பரமாத்மா விசேஷ பண்புகள் கொண்டவர்.

வேதங்கள் : இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் இவை நான்கும் வேதங்கள் ஆகும். நான் மறைகள் என்றும் கூறப்படும். வேதங்களை முழுதும் ஏற்றுகொள்ளும் சித்தாந்தமே வைதீகம் எனப்படுகின்றது. இருக்கு வேதம்

Koviloor Digital Library

என்பவை பிரார்த்தனை மந்திரங்கள். யசூர் வேதம் யாக யக்ஞங்களை பற்றியவை. இருக்கு வேதம் கானமாக அமைய சாமவேதம் வந்தது. பொறியியல், ஏவல், பித்தம், அரசியல், யோகம், சூதாட்டம், வாழ்வியல் இவற்றை கூறுவது அதர்வணம்.

வேதபாகங்கள் : வேதம் நான்கு பாகங்களைக் கொண்டது. அவை சம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம், உபநிடதம் எனப்படும். சம்ஹிதை என்பது பொருள் பொதிந்த கவிதைத்துதி, பிராம்மணம் என்பது விளக்கம், ஆரண்யகம் என்பது காட்டில் கூடி எழுதிவைத்த தத்துவப்பகுதி, உபநிடதங்கள் என்பவை குரு மாணாக்கருக்கு அருகில் சொன்ன தத்துவங்கள்.

வைசேடிகம் : கணாததார் நிறுவியது.

யோகம் : கி.மு. 2ம் நூற்றாண்டில் பதஞ்சலி முனிவர் உருவாக்கியது; நூல் - யோக சூத்ரம்; கோட்பாடு - ஜீவன் பரம் பொருளோடு சேர்வதே யோகம்; சாங்கியம் வற்புறுத்துவது ஞானம், யோகம் வற்புறுத்துவது தியானம்; உயிரைப் புரு எனவும் உடலை பிரகிருதி எனவும் கொண்டு, தனது தூய நிலையிலிருந்து புருவுடன் வழுவி பிரகிருதியின் வலையில் சிக்கியதால், அது விடுபட்டு தன் உண்மை நிலையை அடைவதே யோகம்.

வேதாங்கங்கள் : வேதங்களுடன் தொடர்பு கொண்டவை; பிரிவுகள் - சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தம், சோதிடம்.

திருப்புகழ் : கி.பி. 15 ம் நூற்றாண்டில் சிறந்த முருகப் பக்தராக விளங்கிய அருணகிரிநாதர் எழுதிய நூல்களுள் (கந்தரனுபூதி, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம்) திருப்புகழ் உயர்வாகப் போற்றப்படுவது. சந்தத்தில் சிறந்தது.

ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம் : ஸ்ரீமத் நிகமாந்த மஹா தேசிகன் அருளிய நூல்கள் பலவற்றுள் மேலானது. பாராயணத்துக்கு ஏற்ற பல நூற்றாண்டுகளாக வைணவர் போற்றும் உயரிய நூல்.

Koviloor Digital Library

பின் சேர்க்கை

பதிப்பகங்கள்

145. அருள் வடிவேலன் பதிப்பகம், 43, சிங்காரவேல் நகர், வண்டிப்பாளையம் அஞ்சல், கடலூர் 607004.

146. அருளரசு பதிப்பகம், 11, கட்டி முத்து வீதி, புருகீஸ் பேட்டை, கடலூர் 607004.

147. சிவப்பிரகாசம் பதிப்பகம், சி 26, தென்னாற்காடு வீதி, வட்டம் 19, நெய்வேலி 607803.

148. ஓங்கார ஆஸ்ரமம், சந்தோஷ் நிவாஸ், M-14-2, கிழக்கு சாலை, TNHB காலனி, கொரட்டூர், சென்னை 600 080.

149. தில்லை வரதன் வெளியீடு, புதிய எண் 16/1 (6பி), சுப்பராய முதலியார் தெரு, பெரிய காஞ்சிபுரம் 631 502. தொ.பே. : 04112 223219

இதழ்கள்

82. ஓங்காரம் : மு - 19 மாரியம்மன் கோயில் தெரு, செல்லப் பெருமாள் பேட்டை, பாண்டிச்சேரி 605008.

83. கௌமார அமுதம் : மு - சிரவணபுரம் கௌமார மடாலயம், சின்ன வேடம்பட்டி, கோயம்புத்தூர் 641006.

84. தர்ம சக்கரம் : மு - ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை 639 115, திருச்சி மாவட்டம்; ஆ - ஸ்ரீ மத் சுவாமி நித்யானந்த மகராஜ்.

85. ஸ்ரீ வைஷ்ண சுதர்சனம் : மு - 5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 620 017; ஆ - ஸ்ரீ S. கிருஷ்ணசாமி ஐயங்கார்; தொ.பே. - 0431 2773705.

86. வல்லபன் : மு - 2/561 ஸ்ரீராம் அவென்யூ, கொட்டிவாக்கம், சென்னை 41; தொ.பே. - 044 24483753; ஆ -P.T. இராகவன்; அ - வீஜய லட்சுமி அச்சகம்;

87. மணிநாதம் : மு- சிவசபா மணிநாதம், ஓம் குடில், மப்பேடு, சேலையூர், சென்னை 600 073; தொ.பே. - 22291404; ஆ/வெ- ஸ்ரீநாராயணன்; அ - ராஜன் பிரிண்டர்ஸ்; மாதமொருமுறை;

Koviloor Digital Library

ஆன்மீக நிறுவனங்கள்

5.2 ஈரோடு

39. சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம், 163, வீர பத்திர வீதி, ஈரோடு 638003; தொ.பே. - 0424 2221318, 0424 2219834; த - டாக்டர் மே.செ. இராச மாணிக்கம்; செ - மா. சுப்பிரமணியம்; ப - திருவருட்பா சொற்பொழிவு விளக்கங்கள், ஜோதி வழிபாடு, அகவல் பாராயணம், திருவருட்பா முற்றோதல், அன்னதானம், தினமும் எளியவர்க்கு கூழ் வழங்குதல், வள்ளலார் பிறந்த நாள் விழா, கருத்தரங்கம், இசை நிகழ்ச்சி, பட்டிமன்றம், வழக்காடு மன்றம், நாடகம், அப்பர் குருபூஜை, சமய சொற்பொழிவுகள்; சி - 60 உறுப்பினர்;

5.3 கடலூர்

32. தலைவர், சிவனருள் உழவாரப்பணி திருக்கூட்டம், பெரியார் நகர், காட்டு மன்னார்குடி, கடலூர் மாவட்டம்; செ - A.R. ரத்தினசாமி;

5.7 கோயம்புத்தூர்

16. அருள்மிகு ஞான தண்டாயுதபாணி நற்பணி மன்றம், பாப்பான் குளம் 642 204; உடுமலைப்பேட்டை வட்டம்;

5.6 காஞ்சிபுரம்

23. தலைவர், அருள்மிகு அகத்தியர் ஞானசபை, சுண்ணாம்புக்காரத்தெரு, செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.

24. தலைவர், சோமவார வழிபாட்டுக்குழு, 23, நடுத்தெரு, நாயகன் பேட்டை, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

5.9 சென்னை

16. இயக்குநர், அன்பகம், மனம் வளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளி மற்றும் காப்பகம், 14, தேனுபுரி ஹவுஸிங் காலனி, மாடம்பாக்கம், சென்னை 600 073; இ - வெ. வீரமணி; ப - மனநலம் குன்றியோர்க்கு சிறப்புப்பள்ளி, காப்பகம், தன்னார்வ தொண்டு சேவை;

21. தலைவர், சிவனடியார் திருக்கூட்டம், சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம்.

5.10 சேலம்

10. சாது குகானந்தா திருப்புகழ் சபை, ஸ்ரீ சாரதாம்பாள் அச்சகம், அரசமரம் பிள்ளையார் கோயில் தெரு, சேலம் - 1; தொ.பே. - 2295516; த - கே.வி. ராமனாதன்;

5.15 திருச்சி

31. தலைவர், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம், ஓங்காரக்குடில், துறையூர் 621010, தொ.பே. 04327 255684, 255584 திருச்சி மாவட்டம்.

32. திருநெடுங்கள நாதர் திருவாசக சபை, திருநெடுங்களம், திருச்சி 620 015. கௌத - V. கோபாலகிருஷ்ணன், த/அ - அ முருகேசன்; ப - திருவாசகம் முற்றோதுதல், பெரியபுராண சொற்பொழிவு, தலயாத்திரை, பன்னிரு திருமுறை இன்னிசை; தொ.பே : 0431 - 2556001;

33. தேவார தேனிசை மன்றம், அருள்மிகு சிவசுப்ரமணிய சாமி திருக்கோயில், வரகனேரி, கடைவீதி, திருச்சி - 8.

34. ஸ்ரீ சத்ரு சம்ஹார மூர்த்தி சுவாமிகள் வாரவழிபாட்டு மன்றம், தீ அணைப்பு நிலையம், துறையூர், திருச்சி மாவ; த - அ நமசிவாயம்.

35. ஸ்ரீ சத்ரு சம்ஹாரமூர்த்தி உழவாரப் பணிக்குழு, கரட்டாம் பட்டி, மீனாட்சிபுரம், முசிறிவட்டம் - 621 014 திருச்சி மாவ; த - P. பால்ராஜ்; ப - அன்னதானம், பிரதோஷ வழிபாடு குருபூஜை, குருவார வழிபாடு, பௌர்ணமி பூஜை, குடமுழுக்கு, வெ - பிரதோஷ நாட்காட்டி, நாள் வழிகாட்டி, வேலப்பதேசிகர் திருஉருவப் படம்;

5.18 திருநெல்வேலி

17. தலைவர், ஏனாதியார் சிவனடியார் குழாம், வாசுதேவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

18. தலைவர், விஸ்வ ஆரண்ய ஈஸ்வரர் சிவக்கூட்டம், கடையம், திருநெல்வேலி மாவட்டம்.

19. தலைவர், தெட்சணாமூர்த்தி வார வழிபாட்டு மன்றம், புளியறை, திருநெல்வேலி மாவட்டம்.

20. தலைவர், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் அடியார்கள் திருக்குழாம் & திருவாதவூரார் சைவ சபை, கரிவலம் வந்த நல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

Koviloor Digital Library

22. ஸ்ரீ அறுபத்து மூவர் குரு பூஜைக்குழு, சங்கரன் கோயில் 627756, திருநெல்வேலி மாவட்டம்; தொ.பே. - 224552; தோ - 1976; த - N.சுப்பிரமணிய சிவாசாரியார்; செ - R. ஆவுடையப்பன்; ப - அறுபத்து மூவர் பூஜைகள், சமய சொற்பொழிவு, வீதி உளா, அன்னதானம், வெ - குருபூஜை மலர்; சி - 82 உறுப்பினர்;

23. தென்காசி சிவனடியார் திருக்கூட்டம், 102 சம்பாத் தெரு, தென்காசி 627 811, திருநெல்வேலி மாவட்டம்; தொ.பே. - 04633 225365; தோ - 1995; த - ஆடல் அரசன்; அ - ச. குருஞான சம்பந்தம்; செ - பரமசிவம், B. முத்துசாமி; ப - திருவாசகம் முற்றோதல், ஆலயதிருப்பணி குடமுழுக்கு கூட்டு வழிபாடு; சி - 40 உறுப்பினர்கள்;

24. சங்கரன் கோயில் ஆடித்தபசு திருவிழா அன்னம்பாலிப்பு குழு, 297, வடக்கு ரத வீதி, சங்கரன் கோயில் 627756; தொ.பே. - 04636 222737; த - க. ரவிசங்கர்; செ - க. நடராஜன்; பா - அன்னதானம், பிரதோஷ வழிபாடு, குரு பூஜை, வேலப்பதேசிகர் குருவார வழிபாடு, பௌர்ணமி பூஜை, குடமுழுக்கு ஏற்பாடுகள், சுனாமிக்கு உதவி; வெ - பிரதோஷ நாட்காட்டி, திருவாசகம், சிவபுராணம், வேலப்ப தேசிகர் திருஉருவப்படம், நாள் வழிகாட்டி.

25. தலைவர், சைவசித்தாந்த சபை, குமருகுருபரர் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

26. தலைவர், அருள் நந்தி சிவம் அருட்பணி மன்றம், சிந்து பூந்துறை, திருநெல்வேலி மாவட்டம்.

27. தலைவர், சைவ நெறிக்கழகம் மற்றும் திருநாவுக்கரசர் உழவாரப் பணிக்குழு, விக்கிரம சிங்கபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

28. தலைவர், சைவசித்தாந்த சபை, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்

29. தலைவர், திருநாவுக்கரசர் திருக்கூட்டம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

30. தலைவர், அப்பர் சுவாமிகள் அருட்பணி மன்றம், தென்மலை, திருநெல்வேலி மாவட்டம்.

31. சைவசித்தாந்த சபை, சங்கரன் கோயில் 627756, திருநெல்வேலி மாவட்டம்; தொ.பே. - 224552, 223009; தோ - 1952; த - சி.க.சூ. திருமலைவேலு; செ - R. ஆவுடையப்பன்; ப - சைவசித்தாந்த சொற்பொழிவு, ஆண்டு விழா, தேவார இன்னிசை, சமய விசேட தீக்கை, உழவாரப்பணி; வெ - 56 வெளியீடுகள்; சி - தீட்சாகுரு ஸ்ரீலஸ்ரீ கூனம்பட்டி ஆதீனம்; 150 உறுப்பினர்கள்;

32. ஸ்ரீ ஆத்தியடி விநாயகர் விநாயகர் வார வழிபாட்டுக் குழு, சங்கரன்கோயில் 627756, திருநெல்வேலி மாவட்டம்; தோ - 1979; த - ப. பேச்சிமுத்து; செ

Koviloor Digital Library

- ச. பழனி; ப - சொற்பொழிவுகள், தேவார இன்னிசை, கூட்டு வழிபாடு; வெ - 7 நூல்கள்; சி - 120 உறுப்பினர்;

33. சரசுவதி ஞானசம்பந்தக் காரியாலயம், எ 172, வடக்கு ப்ரதான சாலை, N.G.O காலனி, சவகர் நகர், திருநெல்வேலி 627007; தொ.பே. - 2552750; த - வீணைசரஸ்வதி; செ - இராசகிரி, வத்சலாபாய்; ப - திருமுறை விளக்கம், தேவார இன்னிசை, ஜெபம், தியானம், கலந்துரையாடல், திருக்குறள் இசை, இசைப்படிப்பு, இசைப்போட்டி, கட்டுரைப்போட்டி, வானொலி நிகழ்ச்சிகளுக்கு பயிற்சி, மகேசுர பூசை; வெ - திருஞான சம்பந்தரின் அருளமுதம் தேவார இன்னிசை, இசை சித்திரங்கள்.

5.21 நாகை

16. அஞ்சுவட்டத்தம்மன் வார வழிபாட்டு மன்றம், 10 ஐயனார் கோயில் தோட்டம், அரசாணி குளம், திருவாரூர் சாலை, கீழ்வேளூர் 611 104; நி - எஸ். சங்கர் கணேஷ்; தொ.பே. 04366 276342; நாகை மாவட்டம்.

5.30 பாண்டிச்சேரி (காரைக்கால் உட்பட)

12. தலைவர், ஆயிர வைசியர் இளைஞர் நற்பணி மன்றம், மாரியம்மன் கோயில், காரைக்கால்.

13. தலைவர், அர்த்தஜாம வழிபாட்டு மன்றம், திருத்தெளிச்சேரி, காரைக்கால்.

14. தலைவர், சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை, காரைக்கால்.

15. தலைவர், கயிலாசநாதர் பிரதோஷக்குழு, காரைக்கால்.

16. தலைவர், ஸ்ரீ கயிலாசநாதர் அர்த்தஜாம வழிபாட்டு மன்றம், காரைக்கால்.

17. ஸ்ரீ சத்ய நாராயணா மாதர் பஜனை மண்டலி, ஆயிர வைசியர் மஞ்சப்புதூர், காரைக்கால்.

18. மாதாஜி சித்தர் அறக்கட்டளை, பாண்டிச்சேரி - 605001.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிழை பொறுத்தருள்க

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நிலையில்லாப் பிழையும் நின்னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே

- பட்டினத்தார்

நன்றி

இந்த தொகுப்பினை வெளியிட எல்லா வகையிலும் துணைபுரிந்த நண்பர்கள் திரு. A. **சிவராஜன்,** முனைவர் D. **சரவணன்,** திரு. **கமலபதி** ஆகிய மூவருக்கும் என் மனமார்ந்த நன்றி !

எமது ஆன்மீக வெளியீடுகள்

சிவ வழிபாடு - சில குறிப்புகள்
பிள்ளையார் வழிபாடு - சில குறிப்புகள்
கந்தன் வழிபாடு - சில குறிப்புகள்
அம்பாள் வழிபாடு - சில குறிப்புகள்
திருவிளக்கு வழிபாடு - சில குறிப்புகள்
திருமால் வழிபாடு - சில குறிப்புகள்
சுந்தரர் காட்டிய சிவன்
ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திரர் வழிபாடு - சில குறிப்புகள்
தமிழ் மாவட்டங்களில்
ஆன்மீகத் தொண்டு - சில குறிப்புகள்

வேண்டுகோள்

இந்த தொகுப்பினை அருள்கூர்ந்து படித்து நிறை குறைகளை எழுதவும். செய்திகள் செவி வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும், ஆலயங்களில் கண்டவையாகவும் திரட்டியவை. விடுபட்ட விபரங்கள் பல. சுட்டிக் காட்டினால் சரியான நிறைவான செய்திகளை இணைக்க இயலும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிழைத்திருத்தம்

பக்கம் / வரி	தவறான அச்சு	சரியான அச்சு
அட்டை/முதல் பக்கம்	SPRITUALITY	SPIRITUALITY
16 / 18	உல	உள
64 / 19	6312501	631501
66 / 5,7,9,11,15	உடலுறை	உடனுறை
67 / 13	பவண	பவள
70 / 7	ஆத	ஆமு
70 / 33	ப – ; (நீக்குக)	
73 / 9	இலக்கி	இலக்கிய
74 / 16	திருமாமகன்	திருமாமகள்
78 / 9	தான்	தான்.
83 / 2	அப்பூதியழகள்	அப்பூதியடிகள்
83 / 13,14	வரி 13, 14 (நீக்குக)	
84 / 4	கஙளு (நீக்குக)	
85 / 3	புவட்டிக்	வட்டிக்
86 / 12	கழகம்	கழகம்,
100 / 22	பளங்காட்டூர்	பனங்காட்டூர்
111 / 28	வர்னேஸ்வரன்	வர்ணேஸ்வரர்
163 / 11	முற்பட்டவை	முற்பட்டவை.
163 / 13	எனப்படும்.	எனப்படும்
165 / 9	ஜீரனிக்கத்தக்க	ஜீரணிக்கத்தக்க
165 / 30	வகை	வினைகள்
166 / 20	சாதிப்பிரிவினை	சாதிப்பிரிவினை,
166 / 23	உடம்மை	உடம்பை
172 / 10	கணாததார்	கணாதரர்
சமர்ப்பணம் / 3	அறம் செய்	அறம் செய

Koviloor Digital Library

சமர்ப்பணம்

அறம் பலவண்ணம் அவ்வண்ணம் இன்பம் என்றார் திருமூலர்.
அறத்தால் வருவதே இன்பம் என்றார் வள்ளுவர்.
அறம் செய் விரும்பு என்று வலியுறுத்தியவர் ஔவையார்.

நமது நாடு சரித்திர வரலாறு, இலக்கிய வரலாறு, ஆன்மீக வரலாறு ஆகிய மூவகையாலும் சிறப்பு எய்தியிருந்தாலும் ஆன்மீக வரலாறே மிக உயர்வாக போற்றப்படுகின்றது. சமயங்களும் சித்தாந்தங்களும் பல எழுந்து வளர்ந்த பாரத பூமியில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமயக்குரவர், சந்தானக்குரவர், யோகிகள், ஆச்சாரியார்கள், மகான்கள் சித்தர்கள், வள்ளல்கள் என பல சான்றோர்கள் தோன்றி அறநெறிகளை வலியுறுத்தி வந்துள்ளனர்.

அத்தகைய ஆன்மீகத் தொண்டு இன்றும் ஆதீனங்கள், ஆஸ்ரமங்கள், மடங்கள், குடில்கள், பீடங்கள், ஆலயங்கள், மன்றங்கள், சத்சங்கங்கள், அறக்கட்டளைகள் வாயிலாக தொடர்ந்து வருகின்றது.

பலன் நோக்கி செயல்படுவது பணி. எதுவும் எதிர் பார்க்காமல் தன்னலமின்றி பிறர்க்கென மனம் மொழி மெய்யால் செயல்படுவது தொண்டு.

இத்தகைய ஆன்மீகத்தொண்டினை பல இன்னல்களிடையே அயராது தொடர்ந்து ஆற்றிவரும் பெருமனம் படைத்த பண்பாளர்களை பாராட்டி இந்த தொகுப்பினை அன்னாரின் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

– தொகுப்பாசிரியர்

PRAGASH GRAPHICS, TRY. 8 ☏ 98424 71813